Arimaa Nokku Journal ISSN: 2320-4842
(UGC Care Group-I Journal) Vol-18 No. 01 January-March 2024

# பெண்ணியம் பொதுப் பார்வை

**க.ஷ்யாம் பிரகாஷ்**
ஆய்வாளர் , எம்.ஏ.,எ.ஃபில்.,
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி) கரூர் - 639 005

**முனைவர் ரா.லட்சுமணசிங்**
ஆய்வு நெறியாளர்
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கரூர் - 639 005

## முன்னுரை:

உயிரிக்கோள் எனப்படும் பூமிப்பந்தில் உயிர்கள் எப்பொழுது தோன்றியதோ அப்போதே ஆண், பெண் என்ற பாலினப்பாகுபாடும் தோன்றியது எனலாம். அதிலும் குறிப்பாகச் சமுதாய விலங்கு என அறியப்படும் மனித இனத்தில் இத்தகைய பாகுபாடு பன்னெடுங்காலந்தொட்டுக் காணப்படுவதை நாம் பல தமிழ்நூல்கள் வழி அறியமுடிகிறது. மனிதர்கள் வாழும் வசிப்பிடமாகக் காணப்படும் இப்புவியில் உள்ள அனைத்து இடங்களிலும் சமுதாய அமைப்பில் பல்வேறு நிலைகளில் ஆண், பெண் என்ற இன ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. தமிழில் தோன்றிய பெரும்பாலான இலக்கியங்கள் வழி இப்பாகுபாட்டைக் காணலாம். குறிப்பாக இந்திய, தமிழகச் சூழல்களில் பெண்களின் பிரட்சினைகளை மையப்படுத்தி எழுத்தாளர்கள் பலர் தங்களது புதினங்கள், சிறுகதைகளில் முதன்மைப் பாத்திரங்களாகப் பெண் பாத்திரங்களைப் படைத்துள்ளனர். பெரும்பாலான புதின எழுத்தாளர்கள் பெண்களை இன ரீதியாக, பொருளாதார ரீதியாக மற்றும் குடும்ப அமைப்பைத் தாங்கும் தூண்களாகப் பெண்களைச் சித்தரித்துள்ளனர். அத்தகைய பெண்கள் குறித்த பெண்ணியப் பொதுப்பார்வையாக இக்கட்டுரை அமைகிறது.

## பெண்களுக்கான சிக்கல்கள்.

பெண்கள் பலவிதமான சிக்கல்களை இச்சமுதாயத்தில் அனுபவிக்கின்றனர் என்பதற்காக, அச்சிக்கல்களிகளிலிருந்து பெண்கள் விடுபட வேண்டும் என பல மகளிர் அமைப்புகள், பெண்ணுரிமை இயக்கங்கள் செயல்பட்டுவருகின்றன. பெண்களின் இன்னல்களைத் தீர்ப்பதற்காக பெண்ணியம் என்ற அமைப்பானது இன்றைய சமூகத்தில் தீர்வுகாண முயற்சிக்கிறது எனலாம். மாயூரம் வேதநாயகம் பிள்ளை, மாதவய்யா, வ.ரா., மற்றும் நா.பார்த்தசாரதி போன்று பெண்

எழுத்தாளர்களும், இன்னும் பல புதினப்படைப்பாளர்களும் பெண்களின் சிக்கல்களுக்குத் தீர்வு காண முற்பட்டுள்ளனர்.

சில மேலைநாட்டுப் புதினப்படைப்பாளர்களும், தமிழ்நாட்டுப் புதினப் படைப்பாளர்களும் பெண்களுக்கெதிரான பால்பாகுபாடுகளைக் களைதல், ஆணுக்கு நிகரானவர்கள் பெண்கள் என தங்கள் படைப்புகளில் கதைக்கருவாக உருவாக்கியுள்ளனர். பெண்களுக்கான சிக்கல்களாக உளவியல் சிக்கல்கள், திருமணம் தொடர்பான சிக்கல்கள், பொருளாதாரச் சிக்கல்கள் மற்றும் வாழ்வியல் தொடர்பாக ஏற்படும் சிக்கல்கள் என பல நிலைகளில் பெண்கள் இன்னல்களுக்கு ஆளாகிறாள் என்பதை தங்களது எழுத்துக்களால் பேசவைத்துள்ளனர்.

## உளவியல் சிக்கல்கள்.

பெண்கள் ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்ற நிலை சமுதாயத்தில் நிலவினாலும் ஆரம்ப காலத்தில் தாய்வழிச் சமுதாயமாக இருந்தபோது ’பெண் தலைமை’ நிலவியதை அறியமுடிகிறது. தந்தைவழிச் சொத்துரிமை வந்ததால் பெண்கள் இரண்டாம் நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பெண்கள் சொத்துரிமையோடு இருப்பதனால் ஆண்களின் சொத்தாகப் பார்க்கப்பட்டனர். ஆண்களுக்கு இணையான பணிச்சுமையோடு பெண் விளங்கினாலும் அவளுக்குரிய ஊதியத்தில், பார்வையில் மற்றும் இனப்பாகுபாடு ஆகியவற்றின் வாயிலாக முரண்பாடுகள் இச்சமுதாயத்தில் காணப்படுகிறது. பெண்களுக்குரிய கடமையாக, “மனையறம் பேணுதல்” இருந்தபோதும் வெளியில் சென்று பொருளீட்டவும் நிர்பந்திக்கப்பட்டாள். ஆகவே, பெண்கள் இரட்டைப் பணிச்சுமைக்கு ஆளாகின்றனர். ஆண், பெண் பாலினப்பாகுபாடு பெண்களின் உழைப்பைச் சுரண்டுவதாகவே அறியமுடிகிறது. ஆகவே, தான் உளவியல் அடிப்படையில் பெண்கள் பல்வேறு பாதிப்புக்கு உள்ளாகும் நிலையை இச்சமுதாய்த்தில் காணமுடிகிறது.

பெண்களின் நிலை மற்றும் செயல்பாடுகளின் வளர்ச்சிக்கு இச்சமுகச்செயல்பாடுகளே தடையாக உள்ளது. ஆண், பெண் இருவரும் உற்பத்தியின் வழி இச்சமுதாயத்தை உருவாக்குகின்றனர்.

“ஆண்களும், பெண்களும் உற்பத்தியின் வழியாகச் சேகரித்து, ஒரு சமுதாயத்தினை உருவாக்குகின்றனர். அந்தச் சமுதாயம் தான் மக்களை உருவாக்குகின்றது.” 1

பெண்களின் அடிமைக்குரிய காரணத்தைக் கண்டறிய, வேலை, தகுதிப்பாடு, சுயமரியாதை இவற்றிற்கிடையிலான உளவியல் காரணிகளைப் பகுத்தறிய வேண்டும் என்கிறார்கள் உளவியல் அறிஞர்கள். பெண்கள் ஆண்களால் அடிமைப்படுத்தப்படுகிறார்கள் என்பதைவிட பெண்கள் ஆண்களால் மறைமுகமாகப்

பாதிக்கப்படுகின்றனர் என்பதே உண்மை. அதேசமயம் மார்க்சியப் பெண்ணியம் பெண்கள் பொருளாதாரத் தேவைக்காக, ஆண்களைச் சார்ந்திருக்கக் கூடாது என்று சொல்வதுடன், அனைத்துச் சூழல்களிலும் பெண்ணும் ஆணும் சரிநிகர் சமானம் என்கிறது. மேற்குறிப்பிட்ட உளவியல் பார்வை ஆண்வயச் சிந்தனையின் விளைவே, பெண் நோக்கிலிருந்து பார்க்கப்பட்டவை அல்ல என உளப்பகுப்பாய்வு முறை ஆராயப்பட்டுள்ளது.

## திருமணம் தொடர்பான சிக்கல்கள்.

திருமணம் தொடர்பான உறவுகளில் இச்சமூகத்தில் பெண்ணின் சம்மதம் ஆரம்ப காலங்களில் தேவைப்பட்டதில்லை. அதிலும் சற்று பின்னோக்கிப் பார்த்தால் குழந்தைத் திருமணம், கட்டாயத் திருமணம் மற்றும் விதவைத் திருமணம் என பெண்கள் பல நிலைகளில் பாதிப்புக்குள்ளாகினர் என்பதைக் கடந்த காலம் நமக்குத் தெரிவிக்கிறது. கி.பி.1900 முதல் 1920 வரையிலான காலத்தில் கேசவசந்திரசென், இராசாராம்மோகன்ராய் போன்றவர்கள் குழந்தைத்திருமணத்தையும் கட்டாய திருமணத்தையும் எதிர்த்துள்ளனர். விதவைத் திருமணத்தை வற்புறுத்தியுள்ளனர் என்பதையும் அறியமுடிகிறது.

இன்றைய திருமணத்தினைத் தமிழறிஞர்கள் ஆண், பெண் இருவரது ஒருமித்த வாழ்க்கைக்கான ஒப்பந்தம் என்கின்றனர். இன்றைய திருமண அமைப்பு வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையாமல் பெண்களை அடக்குகின்ற பாரம்பரியச் சடங்காக மாற்றியுள்ளது. பெண்களை அடிமையாக்குகிற முறையாகத் திருமண உறவுமுறை மாற்றப்பட்டதால் பெண்கள் திருமணத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுடன் முதிர்கன்னிகளாக வாழ்வதற்கு இன்றைய திருமணமுறைச் சிக்கலாக அமைந்துள்ளது எனலாம். ஆகவே, தான் இன்றைய இளம் வயதுப்பெண்கள் திருமணம் செய்யாமல் எங்களால் வாழமுடியும் என முடிவெடுத்துள்ளனர். திருமண உறவுகளை வெறுக்கின்ற இத்தகைய தன்னம்பிக்கை மிக்க ஆளுமைத்திறன் மிக்க பெண்களைப் புதுமைப்பெண்களாகப் பார்க்கின்றனர்.

## திருமண எதிர்ப்புக்கான காரணங்கள்

ஆண் ஆதிக்கச் சமுதாயத்தின் வக்கிரங்களை, எண்ணங்களை உணர்ந்த சில பெண்கள் திருமண பந்தத்தை வெறுக்கின்றனர். பெண்களுக்குத் திருமணம் என்பது ஒரு சம்பிரதாயமாக, சட்ட விலங்காகக் கருதப்படுவதால் பெண்கள் இயற்கை உணர்வுகளுக்கும், மனதிற்கும் இடைப்பட்ட துன்பத்தினை அனுபவிக்கின்றனர். இதற்குச் சான்றாக வெளிவட்டங்கள் என்ற புதினத்தின் ஆசிரியரான எஸ்.எம்.ஏ.ராம் படைத்த பெண் பாத்திரமான சுகன்யாவைக் குறிப்பிடலாம்.

“ஒரு சராசரி தாம்பத்ய வாழ்க்கையைப் பத்தி ஒரு இளம் பெண்ணுக்கு எழற எல்லா மாமுல் கற்பனைகளும் எனக்கு மட்டும் ஏனோ அருவருப்பாகவே இருக்குன்னுள சொல்றேன்.” 2

ஆண்கள் பெண்களை திருமணம் செய்துகொண்ட்தும் பெண்களின் சுயவிருப்பங்களையும், சுய உரிமைகளையும் இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். திருமணம் என்ற ஒரு அமைப்பு, பெண், ஆண் என இருவருக்கும் வேறுபட்ட வரையறைகளை வகுத்துவிடுகின்றனர். இதனால் பெண்கள் திருமண உறவைப் புனிதமாகக் கருதுவதில்லை மாறாக வெறுப்பானதாக எண்ணுகின்றனர். இக்கருஹ்து தொடர்பாக சிமண்டி பௌவோ கூறுவது ஏற்புடைதாக உள்ளது.

“திருமணம் ஒரு உள்ளார்ந்த அகத்தூண்டுதலின் வற்புறுத்தலுக்காகத் தோற்றுவிக்கப்பட்டது. திருமணமானது இவ்வளவு காலமாக உரிமைகள் மற்றும் கடமைகளாக உருமாற்றப்பட்டுவிட்ட்தால், அந்தப் பரஸ்பரமான உறவுகள் வெறுப்பூட்டுகின்ற தத்துவமாகிவிட்டன” 3

இக்கூற்றின் மூலம் திருமணத்தைப் பெண்கள் ஏன் விரும்புவதில்லை வெறுக்கின்றனர் என்பதற்கு இவ்வுளவியல் கூற்றே சான்று எனலாம்.

ஒரு சில நேரங்களில் ஆண்களின் தரங்கெட்ட வக்கிரப்புத்திக்கு ஆளாகும் பெண்கள் ஆண் சமுதாயத்தையே வெறுக்கும் நிலைக்கு ஆளாகின்றனர். அதை பெண் எழுத்தாளர் இந்துமதி அவர்களின் சக்தி 81/90 என்ற புதினத்தில் வரும் சக்தி என்ற பாத்திரத்தின் வழி குறிப்பிட்டுள்ளார். இப்புதினத்தில் வரும் பெண் சக்தி ஆண்களின் தகாத செயல்களினால் பாதிக்கபடுகிறாள், அதனால் விரக்தியடைகிறாள். ஆண்கள் பெண்களைத் திருமணம் செய்துகொள்வது தங்களது உடல் இச்சைகளைத் தீர்த்துக்கொள்வதற்காகத் தான் என நினைக்கிறாள். அதேபோல் தான் சந்திக்கும் ஆண்களும் சக்தியை இச்சைக்குரியவளாகவே பார்க்கின்றனர். இச்சம்பவங்களால் ஆண்களையும் திருமணத்தையும் வெறுக்கும் பெண்ணாக மாறுகிறாள்.

”இரண்டு பேர்களின் நிரந்தரமான உடல் சங்கமத்திற்குச் சமூகம் கொடுக்கின்ற அங்கீகாரம் தானே கல்யாணம்” 4

என சக்தி கூறுவதிலிருந்து ஆண் சமூகத்தை ஒரு பெண் வெறுப்பதற்கு இதுவே காரணமாக அமைகிறது எனலாம்.

## பெண்களுக்கேற்படும் பொருளாதாரச் சிக்கல்கள்.

சமுதாயம் திருமணம் என்ற பார்வையில் சில மரபுகளையும், சட்ட திட்டங்களையும் பெண்களுக்கு மட்டுமே வற்புறுத்துகின்றன. வெளிவட்டங்கள் மற்றும் சக்தி81/90 ஆகிய புதினங்களில் இடம்பெற்றுள்ள பெண் பாத்திரங்கள் திருமண உறவை விரும்பாததற்குக் காரணமாக பொருளாதாரச் சிக்கலையும் குறிபிடுகின்றனர்.

பெண்கள் குடும்ப உறவுடன் பொருள் ஈட்டும் கருவியாகவும் பார்க்கும் நிலை சமூகத்தில் உள்ளது. பெண் ஈட்டும் பொருளை ஆண் அபகரிக்க நினைக்கிறான். அவள் மட்டும் உடைமையல்ல அவள் சம்பாதிக்கும் பொருளும் தனக்குச் சொந்தம் என எண்ணும் மனநில ஆணுக்கு உள்ளது. இத்தகைய எண்ணத்தையே உளவியலாளர்கள் ஆணாதிக்கப் போக்கு என அடையாளப்படுத்துகின்றனர்.

பெண்களின் அடிமைக்குரிய காரணத்தைக் கண்டறிய அவர்களின் வேலை, தகுதிப்பாடு முதலானவற்றை ஆராயும் நிலை உள்ளது. வேலை செய்யும் பெண்களின் நிலை புரட்சிகரமானது. ஒரு பெண் மதிக்கப்படுகிறாள் அல்லது ஆணின் குடும்பத்தாரால் போற்றப்படுகிறாள் என்றால் அப்பெண்ணின் பொருளீட்டலே மையப்படுத்தப்படுகிறது.

## வாழ்வியல் தொடர்பான சிக்கல்கள்

இன்றைய நிலையில் பெண்ணியம் தொடர்பாக பெண்களின் சமத்துவம், மதிப்பு, வீட்டிற்குள்ளேயும் வெளியேயும் தம் வாழ்க்கையையும் வாழ்க்கைகான பொருளையும் தேர்வு செய்வது வாழ்வியல் தொடர்பான சிக்கலாகப் பார்க்கப்படுகிறது.

“பெண்கள் அனைத்து வகையான செயற்பாட்டு உணர்வு, பொருளாதார சுதந்திரம், அமைப்பு மற்றும் மனரீதியான அனைத்து ஊனங்களையும் நீக்குவது, இருதரப்பட்ட பாலியல் நீதிக்கு முடிவு வேண்டும் எனில், மாறாத பாலியல் நீதியிலிருந்து நீங்கி தொழில் மற்றும் திறமைகளை வெளியிடும் வண்ணம் பெண்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தி ஒளி பெறச் செய்வது” 5

என்பதிலிருந்து பெண்கள் வாழ்வியல் சிக்கல்களுக்கு ஆளாவது புலனாகிறது.

## முடிவுரை:

பெண்கள் அனைத்து நிலைகளிலும் பாதிக்கப்படக்கூடியவளாக இச்சமூகத்தில் உலவுகிறாள். வாழ்வியல் தொடர்பான பல சிக்கல்களுக்கும் ஆளாகும் பெண் தனக்கென வாழாதவளாக இச்சமூகத்தில் காணப்படுகிறாள்

**அடிக்குறிப்புகள்.**

1. தேவதத்தா, பெண்ணியம் ஒரு வரலாற்றுப்பார்வை, ப.26
2. எஸ்.எம்.ஏ.ராம், வெளிவட்டங்கள், ப.57
3. H..M. Parshley, The Second Sex, (Trans and Ed), P.463
4. இந்துமதி, சக்தி 81/90, ப.146.
5. தேவதத்தா, பெண்ணியம் ஒரு வரலாற்றுப்பார்வை, ப.14